Bus-Stand in Andimadam Panchayat.

* 89. Q.—THIRU A. BALASUBRAMANIAM (on behalf of THIRU Y. VENKATESWARA DIKSHIDAR): Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(*a*) whether it is a fact that the new bus-stand in Andimadam Panchayat, Tiruchirappalli District is not in use even though the construction has been completed; and

(*b*) if so, the reasons therefor?

ஆண்டி மடம் ஊராட்சியில் பேருந்து நிலையம்.

திரு. அ. பாலசுப்ரமணியம் (திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் சார்பில்) : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சி மாவட்டத்தில் ஆண்டி மடம் ஊராட்சியில் பேருந்து நிலையம் கட்டப்பட்டும் அது பயன்படுத்தப்படாமல் இருப்பது உண்மையா ?

(இ) ஆமெனில், காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) ஆண்டி மடம் ஊராட்சி எல்லையில் பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு சில வசதிகள் மேலும் விதிகளின்படி செய்யப்பட வேண்டியிருப்பதால், பயன்படுத்தப் படாமல் இருக்கிறது. பேருந்து நிலையத்தை விரைவில் பயன்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

Auciton of Bus-Stand, Cart-Stand, etc., in Tindivanam Municipality.

* 90 Q.—THIRU A. THANGAVEL: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(*a*) the amount derived from the auction of the bus-stand, cart-stand and fish and mutton market in the Tindivanam Municipality during the years 1971–72, 1972–73, 1973–74 and and 1974–75, item-wise;

(*b*) the amount due, item-wise, from the successful bidder during every year; and

(*c*) the reason therefor?

1975 நவம்பர் 7]

திண்டிவனம் நகராட்சி பேருந்து நிலையம், வண்டிப்பேட்டை முதலியவற்றை ஏலம் விடுதல்.

திரு. ஆ. தங்கவேல்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திண்டிவனம் நகராட்சியில் 1971-72, 1972-73, 1973-74, 1974-75 ஆகிய ஆண்டுகளில் நகராட்சி பேருந்து நிலையம், வண்டிப்பேட்டை, மீன் மற்றும் கறி மார்க்கெட் ஏலம் விடப்பட்ட தொகை இனம் வாரியாக எவ்வளவு?

(இ) ஒவ்வொரு இனத்திலும் ஆண்டுதோறும் ஏலதாரரிடம் வசூல் செய்யப்படாத தொகை எவ்வளவு?

(உ) அதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ)—(உ) ஒரு விவர அறிக்கை@ சட்ட மன்ற மேலவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. தங்கவேல்: துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் பேருந்து நிலையம் ஏலம் விடப்பட்ட தொகை வசூல் ஆகாததால் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன என்று குறிக்கப்பட்டுள்ளது. எப்போது வழக்கு தொடரப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: எப்போது தொடரப்பட்டது என்ற விவரம் இல்லை. வழக்குகள் தொடர்ந்தால், காலதாமதம் ஆவதைத் தடுக்க முடியாது.

THIRU A. R. DAMODARAN: Sir, usually when such markets are auctioned, a deposit amount equal to 3 months' lease is collected from these contractors. May I know, Sir, if such a deposit was collected from these contractors and if so, whether these deposits have been adjusted against the lease amount?

The HON. THIRU S. RAMACHANDRAN: Sir, the rule provides for the collection of the security deposit for 3 months' period. But I am sorry to say that I do not have the information whether any deposits have been collected in these cases. Somehow due to the heavy arrears, I should feel that the Council has to proceed with the action if necessary, through litigation also.

@ 170-171 ஆம் பக்கங்களில் இணைப்பு 1 அச்சிடப்பட்டுள்ளது.

THIRU A. R. DAMODARAN: Sir, the reason why I asked this is that I feel that the Executive Officer is primarily responsible for non-collection of lease amounts. The Council is not responsible. The Council only approves the tender and it is the duty of the Executive Officer to take action to collect this lease amount every month. May I request the Hon. Minister to find out whether there has been any collusion between the Executive Officer and the Contractors to avoid payment so as to throw the responsibility for further litigation on the Municipal Council?

The HON. THIRU S. RAMACHANDRAN: Sir, the point raised by the hon. Member will be given careful consideration and the responsibility fixed.

திரு. ஆ. தங்கவேல்: வழக்கு காலம் கடந்து தொடரப்பட்டதாகத் தெரிகிறது. எங்கே எப்போது வழக்கு தொடரப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவில்லை. நான் கேள்விப்பட்டவரையில், காலம் கடந்து வழக்கு தொடரப்பட்டதாகத் தெரிகிறது. அப்படியானால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: வழக்கு எப்போது தொடரப்பட்டது என்கின்ற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் 1971 ஆம் ஆண்டிலே இருந்து 1975 ஆம் ஆண்டு வரை பல்வேறு வகையில் நிலுவைகள் இருந்து வருகின்றன. ஆகவே, இது சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நகராட்சி ஆய்வாளர் உத்தரவிட்டிருக்கின்றார்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் (*) உடுக்குறி அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

(பிற்பகல் 4-30)

2. அறிவிப்பு.

பேரவையிலிருந்து செய்திகள்

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்புச் சட்டத்தின் 199-வது பிரிவுப்படி பணச் சட்ட முன்வடிவு எனப் பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு, இம் மேலவையின்